மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.88/2019

வாக்குமூலம்: வா.சா.1 முகமது யூசுப்

12.09.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 07.06.2023, 28.02.2024 ம் தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :– நீங்கள் குடியிருக்கும் வீடு 2016ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி உங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆதியில் அது என் அப்பா வாங்கியதாகும். உங்கள் சொத்திற்கு மேற்குப்புறம் உங்கள் சகோதரர் 2ம் வாதிக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு என் மனைவி வழக்கு நிலுவையில் உள்ளபோது அதனை கிரையம் பெற்றுள்ளார். உங்கள் வீட்டிற்கு தென்புறத்தில் பாதை, அதற்கு அடுத்து கோயில் உள்ளது என்றால், என் வீட்டிற்கு தென்புறத்தில் 2 அடி கூரையடி சந்து உள்ளது. அதற்கு தென்புறத்தில் பாதை உள்ளது. பாதைக்கும் தெற்கில் கோவில் வீடு உள்ளது. நீங்கள் சொல்லும் கோவில் வீடு என்பது கோவில்தான் என்றால் சரியல்ல. அதற்கு வடபுறத்தில் யார் வீடு உள்ளது என்றால் வீதிதான் உள்ளது. அந்த கோவிலில் குலதெய்வ வழிபாடு நடைபெறும் என்றால் அது கோவில் வீடுதான், அதில் இருந்து அவ்வப்போது ஆற்றுக்குச்சென்று வழிபாடு செய்வார்கள். பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் உங்கள் சகோதரரிடம் உங்கள் மனைவி 2022ம் பெற்ற கிரைய ஆவணத்தில் உள்ள விபரங்கள் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பத்திரங்களில் வீட்டிற்கு தென்புறத்தில் வீதி, கோவில் என எழுதப்பட்டுள்ளது என்றால், வீதி மற்றும் கோவில் வீட்டு வாசல் என எழுதியுள்ளோம். கிராம கணக்குகளில் அந்த இடம் கோவில் என உள்ளது என்றால் கோவில் வீடு என உள்ளது. 1ம் பிரதிவாதி கருப்புச்சாமி வீட்டிற்கு மேல்புறம் என்ன உள்ளது என்றால் கோவில் வீடு உள்ளது. கோவில் வீட்டிற்கு மேல்புறம் என்ன உள்ளது என்றால் 829/12 என உட்பிரிவு செய்யப்பட்ட வீதி உள்ளது. இவ்வழக்கில் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை பார்வையிட்டபோது நீங்கள் உடனிருந்தீர்க்ள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கை விபரங்கள் தெரியும் என்றால் தெரியும். உங்களுக்கு கிராம நத்தம், ஊர் நத்தம் என குறிப்பிடும் நில வகைப்பாடுகள் பற்றி நன்கு தெரியும் என்றால் அவ்வாறு தெரியாது. ஆரம்ப காலக்கட்டத்தில் மக்கள் வசித்து வந்த இடங்களை பொறுத்து அரசால் பட்டா வழங்கப்பட்டது

என்றால் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் பட்டா வழங்குவார்கள். கிராம நத்தம் பகுதிகளில் மக்கள் வழிபாட்டிற்காக மசூதிகள், தேவாலயங்கள், கோவில்கள் அமைத்திருப்பார்கள் என்றால் சரிதான். நீங்கள் உங்களுடைய சொத்திற்குள் ஆக்கிரமிப்பு உள்ளதாக கூறுகிறீர்களா என்றால், ஆம். என்னுடைய இடத்தில் தென்புறத்தில் 2 அடி கோவில் வீட்டை சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொன்னவாறு கோவில் வீடு என நீங்கள் சொல்லும் இடத்தில் அதாவது சர்வே எண்.829/12ல் 3 அடி உயரத்தில் கட்டிடம் கட்டி வழிபாடு செய்யும் இடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் கோவில் போன்று உள்ளதாக கூறியுள்ளார். 100 ஆண்டு காலமாக மேற்படி நீதிமன்ற ஆணையர் சொன்ன 3 அடி திட்டு உள்ளது என்றால் சரியல்ல. ச.எண்.829/11ல்தான் கோவில் வீடு இருந்தது. மேற்படி கோவில் இடத்தை ஆக்கிரமித்ததாக நீங்கள் 2016க்குப்பிறகுதான் சொல்லி வருகிறீர்கள் என்றால் கடந்த 2015ம் வருடம் 1ம் பிரதிவாதி கருப்புச்சாமிக்கு கோவில் வீட்டை தொட்டவாறு கிழபுறத்தில் இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டது. அவர் கோவில் வீட்டையும் ஆக்கிரமித்துவிட்டார், அதனால்தான் பிரச்சனை ஏற்பட்டது. கருப்புச்சாமியின் சர்வே எண்.829/58 என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி யார் என்றால் சர்வே எண்.829/11ல் உள்ள கோவில் வீட்டை சேர்ந்தவர். நீங்கள் 2ம் வாதியின் பங்கை வாங்கிய பிறகு மேற்கு பகுதியில் புதியதாக இரும்பு கதவு அமைத்தீர்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே உள்ளது. இவ்வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் உங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் 3 அடி திட்டு அமைத்து கோவில் உள்ளதாக சாட்சியமளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் வீட்டிற்கு கிழக்குப்பக்கத்தில் ஒரு வாசல் கதவு உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கு தென்புறம் மூன்று வாசல் கதவுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்குப்புறமாக 3வது ஒரு வாசலை புதிதாக நிங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. கோவில் வீட்டை சேர்ந்தவர்கள் யாரும் ஆக்கிரமிக்கவில்லை என்றால் சரியல்ல. உங்களுக்கு இப்போதும் கூட போதிய வழித்தட வசதி உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் பொது இடங்களை ஆக்கிரமிக்கவேண்டி இதுபோன்ற வழக்குகளை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பல காலமாக குறிப்பிட்ட சமுதாயத்தினரும், பொதுமக்களும் பயன்படுத்தி வரும் கோவிலை சொந்த நலனுக்காக ஆக்கிரமித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**நீங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> :- இல்லை.**

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.09.12 16:41:50 +0530

District Munsif,
Palani.